## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. அஞ்சா | அசல் வழக்கு எண். | 51/2015 |
| க/பெ. | - | | வா.சா. | 3 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

09 .02.2026

**குறுக்கு விசாரணை:**

1. நான் 1965 ல் பிறந்தேன். எந்த வருடம் எனக்கு திருமணானது என்றால் வருடம் நினைவில்லை, எனக்கு அப்போது வயது 25 இருக்கும். என் சகோதரி எந்த வருடம் பிறந்தார் என்றால் அவர் என்னுடைய அக்கா, பிறந்த வருடம் எனக்கு நினைவில்லை. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே என் அக்காவிற்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு நானும் எனது அக்காவும் அவர் அவர் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நானும் எனது அக்காவும் அவர் அவர் கணவர் வீட்டில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் என் அப்பா கோபால் மற்றும் என் சித்தப்பா கந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் என் அப்பா கோபால் மற்றும் என் சித்தப்பா கந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என் தம்பி கிருஷ்ணமூர்த்தி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. எந்த ஊரில் சொத்துக்கள் உள்ளன என்ற விவரம் என் தம்பி கிருஷ்ணமூர்த்தி தான் தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து என்னனென்ன ஆவணங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, என் சித்தப்பா கந்தசாமி என்பவர் என் அண்ணன் சந்திரவேலு மற்றும் தம்பி கிருஷ்ணமூர்த்தி தான் தெரியும். மேற்படி விவரங்கள் கிருஷ்ணமூர்த்தி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். என் சித்தப்பா மகள் அங்கையர்கன்னி என்பவருக்கு சொத்துக்களை எழுதி

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.09 16:07:04 +0530

வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை அங்கையர்கண்ணியின் விருப்பத்தின் பேரில் தான் வாதிகள் அனுபவத்து வருகின்றனர் என்றால் சரிதான்.

3. என் சித்தப்பா எழுதி வைத்த உயில் பற்றி அங்கையர்கன்னிக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், என் தம்பி அழைத்தால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.09 16:07:10 +0530

District Munsif

Vanur.